1973 டிசம்பர் 4]

அதன் மீது மின்விசைப் பம்பு பொருத்தி நீரேற்று குழாய்கள் மூலமாகத் தண்ணீரைக் கிராமத்தின் நடுவே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்கும் கொண்டு வந்து, கிராமத்தின் மக்கட்தொகையான 450 பேருககும் குடிநீர் வழங்கச் செய்ய இத்திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அனுமதியும் பொருளுதவியும் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

*606 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கணக்கங்குடி, ஏனாதி தேளி அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கணக்கங்குடி, ஏனாதி, தேளி ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

திரு. எஸ். வடிவேல்: பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க அரிசனங்கள் சிரமப்படுகிறார்கள். சமீபத்தில் மாயூரத்தில் போராளத்தில் தகராறு ஏற்பட்டு போலீஸ் வந்து அரெஸ்ட் எல்லாம் செய்தார்கள். ஆகவே, தனிப்பட்ட முறையில் கிணறு கட்டிக் கொடுத்து தகராறு வராமல் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனிப்பட்ட முறையில் கிணறு வெட்டுவது, அவர்களுக்கு உதவி செய்வது தாழ்த்தப்பட்ட நலத் துறை கவனிக்க வேண்டிய ஒன்றாகும். சமுதாயத்தில் எந்த ஒரு பகுதி மக்களும் இதுமாதிரி தடுக்கப்பட்டால் அது சமூகக் கேடு என்ற காரணத்திற்காக அதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட வேண்டியதாகும்.